**செய்தி வெளியீடு எண்: 652** **நாள்: 08.05.2024**

**நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்விக்கு வழிகாட்டும்" 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான கல்லூரிக் கனவு 2024" நிகழ்ச்சி**

**மாவட்ட அளவிலான தொடக்க விழா,**

**இடம் – சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், கோட்டூர்புரம்.**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் **"கல்லூரிக் கனவு 2024" நிகழ்வானது அண்ணா நூற்றாண்டு நூலகம், கோட்டூர்புரம் சென்னையில் தலைமைச் செயலாளர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.** இவ்விழாவில் சென்னையில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயின்ற மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

பன்னிரண்டாம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கான உயர்கல்விக்கு வழிகாட்டும் **"கல்லூரிக் கனவு"** என்ற நிகழ்வானது 25.06.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. க. ஸ்டாலின் அவர்களால் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் துவக்கி வைக்கப்பட்டது. கடந்த 2022–2023 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளியில் பயின்று 12–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற 3,30,628 மாணவர்களின் உயர்கல்விக்கு வழிகாட்டுதலின் மூலமாக 2,43,710 மாணவர்கள் மருத்துவம், பொறியியல், கலை மற்றும் அறிவியல், சட்டம், பாலிடெக்னிக் மற்றும் இதர உயர்கல்வி படிப்புகளில் சேர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதன் தொடர் நிகழ்வாக மாண்புமிகு விளையாட்டுத் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களால் கோயம்புத்தூரில் 2024 ஆம் ஆண்டுக்கான **"கல்லூரிக் கனவு 2024"** நிகழ்வானது 29.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மாவட்ட வாரியாக நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "கல்லூரி கனவு 2024" நிகழ்ச்சி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கீழ்காணும் அட்டவனைப்படி நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| 08.05.24 | சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், நாகப்பட்டினம், மதுரை, திருநெல்வேலி, சேலம் |
| 09.05.24 | திருவள்ளூர், நீலகிரி, பெரம்பலூர், மயிலாடுதுறை, திண்டுக்கல், தருமபுரி |
| 10.05.24 | செங்கல்பட்டு, திருப்பூர், அரியலூர், கடலூர், தேனி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி |
| 11.05.24 | காஞ்சிபுரம், ஈரோடு, தஞ்சாவூர், விழுப்புரம், விருதுநகர், தூத்துக்குடி, திருப்பத்தூர் |
| 13.05.24 | இராணிப்பேட்டை, தென்காசி, நாமக்கல், கரூர், திருவாரூர், புதுக்கோட்டை, கள்ளக்குறிச்சி, சிவகங்கை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, வேலூர் |

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை மாவட்டத்திற்கான **"கல்லூரிக் கனவு 2024"** நிகழ்வானது 08.05.24 அன்று நடைபெற்றது.

இவ்விழாவில் தலைமைச் செயலாளர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது பள்ளிக் கல்வி மாணவர்களின் மேற்படிப்பிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட நான் முதல்வன் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் கல்லூரிக்கனவு (Career Guidance), உயர்வுக்குப்படி, நான் முதல்வன் ஒலிம்பியாட்(Naan Mudhalvan Olympiad) சிறந்த மூன்று திட்டங்கள் மாணவர்களுக்கு பல்வேறு வகையிலும் மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது மேலும் அவர் நானும் அரசுப் பள்ளியில் படித்தவன் என்பதை பெருமையுடன் தெரிவித்தார்.

மேலும், தலைமைச் செயலாளர் பேசுகையில் கூடுதல் தலைமைச் செயலாளர் (ம) வளர்ச்சித் திட்ட ஆணையர் அவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் ஆரம்பப்பள்ளி கல்வி முதல் உயர் படிப்புக் கல்வி வரை அரசு பள்ளி மாணவர்களுக்கு எந்தெந்த வகையில் உதவி வருகிறது என்பதை இரத்தினச் சுருக்கமாக மிக அழகாக விளக்கினார் என்பதைச் சுட்டிக் காட்டிய அவர் வளர்ந்து வரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ப பள்ளிகளில் உயர்தர பரிசோதனை நிலையம், மாதிரிப் பள்ளிக் கூடங்கள் ஆகியவற்றின் மூலம் சிறப்பான கல்வியை பெற முடியும் என்றும் கூறிய அவர் பசித்தவனுக்கு முதலில் உணவு கொடு பின்னர் உதவி செய் என்று விவேகானந்தர் கூறியதை சுட்டிக் காட்டிய அவர், அந்த வகையில் பள்ளி மாணவர்களுக்காக தொடங்கப்பட்ட காலை உணவு ஊட்டச் சத்து திட்டம், குழந்தைகள் பள்ளிக்கு விடுப்பின்றி தொடர்ந்து வர ஊக்கமளிப்பதுடன் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கு குழந்தைகளை படிக்க வைப்பதில் இத்திட்டம் பேருதவியாக செயல்பட்டு தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்மாதிரியாக திகழ்கிறது.

பள்ளிக் கல்வி, தமிழ்நாடு திறன் மேம்பட்டு கழகம் மற்றும் உயர்கல்வித் துறைகளின் கூட்டு முயற்சிகள் மூலம் தமிழ்நாட்டில் உயர் கல்வியில் மொத்த சேர்க்கை விகிதம் (GER) கணிசமாக அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. வளர்ந்து வரும் தொழில் துறை முன்னேற்றத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் ஒவ்வொரு மாணவருக்கும் அவர்களின் கல்வி மற்றும் தொழில்சார்

கனவுகளைத் தொடர தேவையான உபகரணங்கள் மற்றும் வேலை வாய்ப்புகளை நான் முதல்வன் திட்டத்தின் மூலம் வழங்கி வருகிறது. மூன்று கட்டங்களாக (3 Phases) நடத்தப்பட்ட உயர்வுக்குப்படி திட்டத்தில், பொறியியல், கலை மற்றும் அறிவியல், பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் இதுவரை பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான உயர்கல்வி நிறுவனங்களில் சேர வசதி செய்யப்பட்டது. உங்களிடத்திலேயே உங்களைத் தேடி உங்களுக்காக பல்துறைகளிலும் உள்ள கல்வியாளர்கள் மூலம் வழிகாட்டுவதற்கு இந்த கல்லூரிக் கனவு திட்டத்தை நான் முதல்வன் செயல்படுத்தி வருகிறது. தலை குனிந்து என்னைப் பார். தலை நிமிர்ந்து உன்னை நடக்க வைக்கிறேன். ......புத்தகம். எனவே, நீங்கள் அனைவரும் உயர்கல்வியில் சேர்ந்து நன்றாகப் பயின்று நமது மாநிலத்திற்கு பெருமை சேர்ப்பீர்கள் என்று நம்புவதாக தெரிவித்தார்.

தமிழக அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் (ம) வளர்ச்சி ஆணையர் அவர்களின் உரையில் மாணவர்களாகிய உங்களுக்குள்ள கனவு போல மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் கனவு உண்டு. குறிப்பாக குடும்பம், பொளாதாரம் காரணமாக கல்வியை தொடர முடியாத நிலையில் உள்ள மாணவர்களின் கனவை மெய்ப்பிக்கும் விதமாக புரட்சிகரமான காலை உணவு திட்டத்தை பள்ளி மாணவர்களுக்கு துவக்கி வைத்து பள்ளி மாணவர்களின் வருகை பதிவை உறுதி செய்தார். மேலும் புதுமைப் பெண் திட்டம் மூலம் பயன் பெறும் மாணவியர்கள் படிப்பிற்கு ஏழ்மை நிலை தடை இல்லை என்பதை உறுதி செய்து மாணவியரின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு பொருளாதார சுதந்திரம் தந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் கல்வி இடை நின்ற மாணவியர்கள் பலரும் கல்வியை தொடர்ந்துள்ளனர்.

தமிழ் புதல்வன் திட்டம் வழியாக ஏழை மாணவர்களும் மாதம் ரூ.1000/- பெற்று பயன் அடைய உள்ளனர். நான் முதல்வன் போட்டி தேர்வுகள் வழியாக பயனடைந்த, டாக்டர் பிரசாந்த் அகில இந்திய அளவில் 75-வது இடத்தைப் பிடித்துள்ளார். மேலும், பீடி சுற்றும் தொழிலாளியின் மகள் இன்பா குடிமைப்பணி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார் என்பது மிகச் சிறப்பு.

உயர்கல்வி என்றவுடன் நாம் அனைவருக்கும் நியாபகம் வருவது பொறியியல் மற்றும் மருத்துவ படிப்புகள் தான். பொறியியல், மருத்துவம் மட்டுமல்லாது மிகச்சிறந்த படிப்புகள் உலகில் ஆயிரம் உண்டு. குறிப்பாக தொழிற்துறையில் முன்னணியாக உள்ள தமிழ்நாட்டில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் குறிப்பாக டாடா நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் செய்து மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் பயிற்றுவிக்கப்படும் உயர்திறன் தொழிற்பயிற்சிகளிலும், பாலிடெக்னிக் நிலையங்களிலும் சிறந்த படிப்புகளும் அதற்கு இணையான வேலைவாய்ப்புகளும் உள்ளன. இத்தகைய படிப்புகள் படித்தவர்களுக்கு தொழிற்துறையில் சிறந்த எதிர்காலம் உண்டு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டுப்புழு கூட்டிற்க்குள் வளரும் வண்டு கூண்டை கிழித்து சிறகை விரித்து, பறப்பதுப்போல், உங்கள் கனவுகளை சுமந்து கொண்டு இக்கல்லூரிக் கனவு நிகழ்ச்சி மூலம் உங்கள் சிறிய உலகிலிருந்து வெளி வந்து சிறகடிக்க மனமாற வாழ்த்துக்கள்.

மகாகவி பாரதியார் முழுங்கியது போல்

"வல்லமை தாராயோ இம்மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்ற வலிமை மிகு வார்த்தைகளுக்கு உயிர் தரும் வகையில் இம்மாணாக்கர்கள் அனைவரும் கல்லூரி கனவு நிகழ்ச்சி மூலம் பயன்பெற்று, நம் தமிழ்நாடு முன்னேற்றத்திற்கு அடித்தளம் இடுவீர்கள் என்ற நம்பிக்கையை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித்துறை, தொழில்நுட்ப கல்வி இயக்ககம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டு இருந்தன.

இந்நிகழ்ச்சியில் திரு. சிவ்தாஸ் மீனா இ.ஆ.ப. அரசு தலைமைச் செயலாளர்., திரு. நா. முருகானந்தம் இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / வளர்ச்சி ஆணையர், திரு. ஜெ. குமரகுருபரன் இ.ஆ.ப., அரசு செயலாளர், பள்ளி கல்வித்துறை, மரு தாரேஸ் அகமது இ.ஆ.ப., அரசு செயலாளர், சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை, திரு. கி. வீர ராகவ ராவ் இ.ஆ.ப., ஆணையர், தொழில் நுட்பக் கல்லுரி இயக்ககம், திரு. செ. கார்மேகம், உயர்கல்வித் துறை இயக்குநர், திருமதி. சரண்யா இ.ஆ.ப., துணை ஆணையர், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in